பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 21 | செவ்வாய்க்கிழமை | 07.10.2025 | அதிர்வு 067

## தாஜுதீன் கொலை தொடர்பில் உண்மைகள் வெகுவிரைவில்

### அநுர அரசு அறிவிப்பு



"பிரபல ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலையுடன் தொடர்புடைய விசாரணைகள் தீவிரமடைந்துள்ள 06



# நாட்டு மக்களை ஏமாற்றுவது போன்று உலகை இலங்கை ஏமாற்ற முடியாது!

## அரசின் உறுதிமொழிகள் வெறும் வார்த்தைஜாலங்களே; ஜெனிவாத் தீர்மானம் குறித்து சாணக்கியன் எம்.பி. கருத்து

'இலங்கை அரசாங்கம் தனது நாட்டின் சொந்த மக்களை ஏமாற்றுவது போல் இனிமேலும் உலகை ஏமாற்ற முடியாது. இலங்கையின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் உள்ளன என்பதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்வைத்த இணை அனுசரணை நாடுகள் நினைவூட்டி உள்ளன. இலங்கையின் ஒவ்வொரு உறுதிமொழியும் வெறும் வார்த்தைஜாலமாகச் சிதைந்து விட்டன'."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். 06

# கம்பளையில் கோர விபத்து! மூன்று பெண்கள் உயிரிழப்பு!!



கம்பளை, தொலுவ பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற கோர விபத்தில் மூன்று பெண்கள் பலியாகியுள்ளனர்.

கம்பளை நகரில் இருந்து தொலுவ வழி ஊடாக குருநாகலை நோக்கிப் பயணித்த கார் ஒன்று, பாதசாரிகள் மீது மோதியுள்ளது.

அதன்பின்னர் வீதிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி மீதும் அந்தக் கார் மோதியுள்ளது.

கார் மோதியதால் தூக்கி வீசப்பட்ட இரு பெண்கள் மீது லொறியின் பின் டயரும் ஏறியுள்ளது. அவர்கள் சம்பவ 06




வடக்கு சட்டத்தரணிகளின் போராட்டம் குறித்து நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இன்று வடக்கு மாகாணத்தில் பெரும்பாலும் எல்லா நீதிமன்றங்களின் சட்டத்தரணிகளும் நீதிமன்ற மற்றும் காணிப்பதிவு நடவடிக்கைகளை பகிஷ்கரித்து, அந்தந்தப் பிரதேச நீதிமன்றங்களின் முன்னால் கவனவீர்ப்பில் ஈடுபட இருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

காணிப் பரிமாற்றம் தொடர்பில் கிரிமினல் குற்றத்துக்குரிய தவறிழைத்தவர் எனப் பொலிஸாரால் தேடப்பட்டவர் என்று கூறப்படும் சட்டத்தரணி நேற்றுத் தாமே பொலிஸுக்கு நேரடியாகப் பிரசன்னமானமையை அடுத்து அவர் கைது செய்யப்பட்டார். அவர் பின்னர் விசாரணைகளை அடுத்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்.

காணி உறுதி எழுதியமை தொடர்பாக இடம்பெற்ற கிரிமினல் குற்றங்களினால் தாங்கள் பாதிக்கப்பட்டனர் என்று சில பொதுமக்கள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே 06





# பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ வங்கக் கடலில் தீர்த்தமாடிய வல்லிபுர ஆழ்வார்

யாழ். வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயப் பெருந்திருவிழாவின் சமுத்திரத் தீர்த்தோற்சவம் நேற்று மாலை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ நடைபெற்றது.

**(படங்கள்:- ஜி.எல். தர்ஷன்)**













# நான் ஜனாதிபதியாக வந்திருந்தால் முதலில் மஹிந்தவைச் சிறையில் அடைத்திருப்பேன்!

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

"தங்காலை - கால்டன் இல்லத்தில் வெறும் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகளை வைத்திருக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு - விஜேராம இல்லத்திலும், ஜனாதிபதி மாளிகையிலும் பயன்படுத்திய தளபாடங்கள் மிகப் பெறுமதி மிக்கவை. அவை அனைத்தும் இறக்குமதி செய்யப்பட்டவையாகும். நான் ஜனாதிபதியாகியிருந்தால் முதலில் அதற்காக அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பேன்."

- இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டில் ஊழல்களை ராஜபக்ஷ குடும்பமே நிர்வகிக்கின்றது. ஊழல், மோசடிகள் வரையறைகளைத் தகர்த்துச் சென்று கொண்டிருக்கின்றன. ஆயிரம் சிறைகளில் அடைத்தாலும் இவர்கள் ஊழல்களைக் கைவிட மாட்டார்கள்.

ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை நீக்குவதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட மூன்று முன்னாள் ஜனாதிபதிகள் உத்தியோகபூர்வ இல்லங்களை இன்னும் அரசிடம் கையளிக்கவில்லை.

மஹிந்த ராஜபக்ஷவின் பேச்சாளரான சட்டத்தரணி விஜேராம இல்லத்தில் அலரிமாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்தில் உள்ள பொருட்கள் இருப்பதாகவும், அவை அரசால் பொறுப்பேற்கப்பட்டதன் பின்னரே தமது தனிப்பட்ட பொருட்களை அங்கிருந்து அகற்ற முடியும் என்றும் கூறுகின்றார்.

உத்தியோகபூர்வ இல்லத்தை மீள் புனரமைப்பதற்காக 50 கோடி பொது நிதியைச் செலவிட்ட மஹிந்த ராஜபக்ஷ தனது சொந்தப் பணத்தில் ஒரு ஏணியையாவது வாங்கியிருப்பார் என்று நம்புகின்றீர்களா?

தனது கால்டன் இல்லத்தில் வெறும் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகளை வைத்திருக்கும் மஹிந்த ராஜபக்ஷ, விஜேராம இல்லத்திலும், ஜனாதிபதி மாளிகையிலும் அதனை விடவும் பெறுமதியான தளபாடங்களையே வைத்திருந்தார். அவை அனைத்தும் இறக்குமதி செய்யப்பட்டவையாகும்.

நான் ஜனாதிபதியாகியிருந்தால் முதலில் அதற்காக அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்திருப்பேன். 24 மணித்தியாலங்களுக்குள் கைது செய்ய முடியும்.

அவர்கள் மீது பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலும், விஜேராம மாவத்தையிலுள்ள அந்தப் பொருட்களை எவ்வாறு கொள்ளையிடுவது என்பதே மஹிந்தவின் சிந்தனையாகவுள்ளது.

எனவே, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு ஊழலை ஒழிப்பதாகப் பெருமிதம் கொண்டாலும், மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இவர்கள் நாட்டை மேம்படுத்தியதாக ஏற்றுக்கொள்ள முடியாது. இவர்கள் நாட்டுக்குச் சேவையாற்றியதாகவும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அன்றைய தினத்தில்தான் இந்த அரசு மக்களுக்காகச்செயற்படுகின்றதுஎன்பதைஏற்றுக்கொள்வோம். எமக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும் உண்மையைக் கூற நாம் அச்சப்படுவதில்லை." - என்றார்.

# போதைப்பொருள் வாங்க சகோதரி பணம் வழங்காமையால் சகோதரன் உயிர்மாய்ப்பு!

## யாழ்ப்பாணத்தில் இப்படிச் சம்பவம்



யாழ்ப்பாணத்தில் போதைக்கு அடிமையான ஆண் ஒருவர் நேற்று தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார்.

சுழிபுரம் - மூளாய் பகுதியைச் சேர்ந்த தயாபரன் முரளிவாசன் (வயது 34) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

இந்த நபர் போதைக்கு அடிமையாகியிருந்த நிலையில் தனது சகோதரியிடம் போதைப்பொருள் வாங்கப் பணம் கேட்டுள்ளார். சகோதரி அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து அந்த நபர் வீட்டினுள் சென்று தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர் மாய்த்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். வட்டுக்கோட்டை பொலிஸார் சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

# இலங்கையில் தினமும் 100 புற்றுநோயாளர்கள்

## சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தகவல்

இலங்கையில் ஒவ்வொரு நாளும் சுமார் 100 புதிய புற்று நோயாளர்கள் கண்டறியப்படுகின்றனர் எனவும் ஆண்டு தோறும் கிட்டத்தட்ட 35,000 பேர் பாதிக்கப்படுகின்றனர் என்றும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன் புற்றுநோய் சிகிச்சை சுகாதாரத் துறையின் மீது பெரும் சுமையை ஏற்படுத்துவதாகவும், மொத்த மருந்து செலவில் கிட்டத்தட்ட 30 சதவீதம் புற்றுநோய் மருந்துகளுக்கு ஒதுக்கப்படுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் புற்றுநோய் மருந்துகளின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைவாக இருந்தாலும், அவற்றின் செலவுகள் மிக அதிகம் என அவர் குறிப்பிட்டார்.



இலங்கையர்களில் 30 முதல் 70 வயதுக்குட்பட்டவர்களுக்கிடையில் ஏற்படும் பெரும்பாலான மரணங்களுக்குத் தொற்றுநோயல்லாத நோய்கள் காரணமாக இருப்பதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பிறப்பு வீத வீழ்ச்சி

நாடு பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை போன்ற சிக்கல்களில் மாட்டியுள்ள பின்புலத்தில் நாட்டில் பிறப்பு வீதம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் நாட்டில் பிறப்புகளின் எண்ணிக்கை 80,945 ஆல் குறைந்துள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் அதிக பிறப்புகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளன எனவும், அதே நேரத்தில் மிகக் குறைந்த பிறப்புகள் முல்லைத்தீவு பகுதியில் பதிவாகியுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

2020ஆம் ஆண்டில் பிறப்புகளின் எண்ணிக்கை 301,706 ஆக காணப்பட்ட நிலையில், 2024 ஆம் ஆண்டில் பிறப்புகளின் எண்ணிக்கை 220,761 ஆக பதிவாகியுள்ளது.

2021 ஆம் ஆண்டில் பிறப்புகளின் எண்ணிக்கை 284,848 ஆகவும், 2022 இல் 275,321 ஆகவும், 2023 இல் 247,900 ஆகவும் பதிவாகியுள்ளது. கடந்த ஆண்டில் மேலும் 27 ஆயிரத்துக்கும் அதிகமான எண்ணிகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதேசமயம், பதிவாளர் நாயகம் துறையின் பதிவுகளின்படி, 2021 முதல் 2024 வரை இறப்புகளின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளது.

உலகெங்கிலும் - குறிப்பாக இலங்கை, தமிழ்நாடு போன்ற இடங்களில் - பிறப்பு எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகிறது. இது மக்கள் தொகை மாற்றங்கள், முதியோர் சமூகம் அதிகரித்தல் போன்ற பல தாக்கங்களை ஏற்படுத்துகிறது.

பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள், பிறப்பு கட்டுப்பாட்டுத் திட்டங்கள், குடும்பக் கட்டுப்பாடு முறைகள், உலகளாவிய தொற்றுநோய்கள் போன்ற காரணங்களால் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடாது என்ற முடிவு குடும்ப மட்டங்களில் எடுக்கப்படுவதாக சமூக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அரச குடும்ப நல சுகாதார சேவையாளர்கள் சங்கத்தின் பிரமுகர், நாடளாவிய ரீதியில் குடும்பக்கட்டுப்பாடு முறைகளை பின்பற்றுவோரின் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார்.

பிறப்பு எண்ணிகை கணிசமாக வீழ்ச்சியுறுவது நாட்டில் தொடர் தாக்கங்களை ஏற்படுத்தும் என எச்சரிக்கப்படுகின்றது.

பாடசாலைகள், ஆரம்பப் பாடசாலைகள் தொடர்ந்து மூடப்படும் சூழ்நிலை ஏற்பட்டு வருகின்றது.

நாட்டின் பிறப்பு வீத வீழ்ச்சி எதிர்காலத்தில் நாட்டில் தொழிலாளர் வளப் பற்றாக்குறையை ஏற்படுத்தக் கூடும் எனவும், அது நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் எனவும் எச்சரிக்கப்படுகின்றது

உலகளவிலும் குழந்தைகள் பிறக்கும் விகிதம் குறைந்து வருகின்றது என்றும், இது சமூகத்தில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். இதனால் இந்த நூற்றாண்டின் இறுதியில், ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் தொகை குறையும் என்றும் கூறப்படுகின்றது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்த குற்றவியல் விசாரணையை பொலிஸார் தொடங்கியிருக்கின்றனர். இது பொலிஸார் தாமாக முன்னெடுத்த நடவடிக்கை அல்ல. பொதுமக்களின் முறைப்பாட்டின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை.

ஆயினும், சட்டத்தரணியைத் தேடிச் சென்ற பொலிஸார் சட்டத்தரணி வீட்டில் இல்லை என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், வீட்டுக்குள் புகுந்து அறைகள், கட்டில்களுக்குக் கீழ், வீட்டுக்குப் பின்னால் இருந்த வாழைத்தோட்டம் எல்லாம் தேடுதல் நடத்தினார்கள் என்று கூறப்படுகின்றது. அதைக் கூடத் தவறு என்று சொல்ல முடியாது. ஆனால் சட்டத்தரணியினுடைய அலுவலக அலுமாரிகள், மேசைகள், லாச்சி, அங்கிருந்த கோவைகள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் துளாவித் தேடுதல் நடத்தினர் என்று சட்டத்தரணிகள் பக்கத்தில் குற்றஞ்சாட்டப்படுகின்றது. அது உண்மையானால், சட்டத்தரணிகள் நீதிமன்றப் பகிஷ்கரிப்பு, கவனவீர்ப்புப் போராட்டம் போன்றவை மாத்திரமல்ல, அதையும் தாண்டி காத்திரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சட்டத்தரணியிடம் அவரது கோவைகளில், அவரது மேசைகளில், அலுமாரிகளில் தேடுதல் நடத்துவது என்பது - அதுவும் பொலிஸார் தேடுதல் நடத்துவது என்பது - சட்ட உரிமைக்கும் முறைமைக்கும் மிக மோசமான ஆபத்து விளைவிக்கும் நடவடிக்கையாகும். பொலிஸாருக்கு எதிரான பல வழக்குகளின் கோவைகள் சட்டத்தரணிகளின் மேசைகளில், அலமாரிகளில், லாச்சிகளில் இருக்கும். கட்சிக்காரர்கள் தங்கள் சட்டத்தரணிக்கு மட்டுமே தெரிவிக்கும் உண்மை விடயங்கள், தஸ்தாவேஜுக்கள், ஆவணங்கள் சட்டத்தரணி வசம் இருக்கும் - அவற்றில் பொலிஸார் தேடித் துளாவிக் கை வைக்க அனுமதித்தால் நாட்டில் சட்ட, நீதித் துறையும் அந்த முறைமையுமே நாசமாகிவிடும். சட்டத்துறையின் அடிப்படை விடயங்களுக்கே ஆப்படிக்கும் நடவடிக்கை இது.

அப்படி நடந்திருந்தால், அது குறித்து வெறும் நீதிமன்ற பகிஷ்கரிப்பு மற்றும் கவனவீர்ப்பு ஆகியவற்றோடு சட்டத்தரணிகள் அடங்குவது என்பது அல்லது அவற்றை மாத்திரம் சட்டத்தரணிகள் நாடுவது என்பது அவர்கள் தங்கள் சட்டத்தொழில் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் என்ற கருத்தைத்தான் தரும். சட்டத்தரணிகள் குற்றஞ்சாட்டுவது போல பொலிஸார் அத்துமீறி நடந்திருக்கிறார்கள், சம்பந்தப்பட்ட சட்டத்தரணியின் மேசைகளை, அலமாரிகளை, துளாவித் தேடி இருக்கிறார்கள் என்பது உண்மையானால், சட்ட முறைமையில் அதைக் கையாளும் நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட வேண்டும். இத்தகைய குற்றங்கள் இழைக்கப்பட்டால் அடுத்த ஒரு மாதத்து காலத்துக்குள் அது தொடர்பில் உயர் நீதிமன்றத்திடம் அடிப்படை உரிமை மீறல் மனு மூலம் விண்ணப்பித்து நிவாரணம் பெற முடியும். சட்டத்தரணிகள் தங்கள் தொழில் மீதும், சட்ட முறைமையில் நீதி கிடைக்கும் என்பதிலும் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பார்களாயின் இந்த விடயத்தில் உடனடியாக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்து நீதி கோர வேண்டும்.

இது போன்ற பிரச்சினை ஓரிரு சட்டத்தரணிகள் மீது மாத்திரமல்ல, வடக்கில் ஐந்து, ஆறு பேருக்கு எதிராக இருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

நேற்று கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட சட்டத்தரணி தொடர்பிலும், சட்ட வியாக்கியான பிரச்சினையை முன்வைத்தே அவரைப் பொலிஸார் குற்றவியல் வழக்கில் சம்பந்தப்படுத்தி இருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

ஒரு தரப்பின் Power of Attorney (வழக்கறிஞர் அதிகாரம்) விடயத்தில் வியாக்கியானம் தொடர்பில் குற்றவியல் வழக்கில் சட்டத்தரணியை பொலிஸார் மாட்டுவது முறையானதா என்றொரு கேள்வி உள்ளது. அதையும் உயர்நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்று பொலிஸாரின் செயற்பாடு அத்துமீறலாக இருந்தால் இத்தகைய நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே ஒட்ட நறுக்கும் நடவடிக்கையை - உத்தரவை - உயர்நீதிமன்றத்திடம் இருந்து சட்டத்தரணிகள் பெற முயற்சிக்க வேண்டும். அதுதான் எதிர்காலத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பாக அமையும் என்று நினைக்கிறேன்.




## மின்சார தொழிற்சங்கங்களின் பணிப்புறக்கணிப்பு தீவிரம்

மின்சார பொறியியலாளர்கள் சங்கம் மற்றும் பிற தொழிற்சங்கங்கள் தங்கள் தொழிற்சங்க நடவடிக்கையைத் தீவிரப்படுத்த தீர்மானித்துள்ளன.

அதன்படி, துறைசார் அமைச்சரின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களில் பங்கேற்பது போன்றவற்றைத் தவிர்ப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பான சட்டமூலம் 26ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்துக் கடந்த செப்டம்பர் 4 ஆம் திகதி முதல் மின்சார தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட ஆரம்பித்துள்ளன.

## நாட்டு மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் இலங்கை தொடர்பான பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு, மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கையில் மீள் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பான விவகாரத்தை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தன் கவனத்தில் தொடர்ந்து வைத்திருக்க முடிவு எடுத்துள்ள பின்புலத்தில் தமது எக்ஸ் தளத்தில் இவ்வாறு பதிவிட்டிருக்கின்றார் சாணக்கியன் எம்.பி.

### சுமந்திரன் கருத்து

இலங்கைத்தமிழரசுக்கட்சியின்பொதுச் செயலாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் தமது எக்ஸ் தளத்தில் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

“இலங்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்” தொடர்பான தீர்மானத்தை (ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில்) வாக்கெடுப்பின்றி நிறைவேற்றியது. 2012 முதல் இது போன்ற பல தீர்மானங்கள் இருந்த போதிலும், 16 ஆண்டுகளுக்கும் மேலாக முன்னேற்றம் இல்லாததால் ஏமாற்றமடைந்தாலும், சர்வதேச மேற்பார்வையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்ததை நாங்கள் வரவேற்கின்றோம்.” என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தாஜுதீன் கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தால் சிலர் கலக்கமடைந்துள்ளனர். அந்தக் கலக்கத்துக்கும் தாஜுதீன் கொலைக்கும் இடையிலான தொடர்புகள் என்ன என்பது வெகுவிரைவில் நாட்டுக்கு வெளிப்படுத்தப்படும்.”

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“வசீம் தாஜுதீன் கொலையுடன் தொடர்புடைய விசாரணைகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாகவே சிலர் கலக்கமடைந்துள்ளனர். இந்தக் கலக்கத்துக்கும் தாஜுதீன் கொலைக்கும் இடையிலான தொடர்புகள் என்ன என்பது விசாரணைகள் மூலம் வெளிப்படும். குறிப்பிட்ட ஒரு குடும்பமே இவ்வாறு அளவுக்கதிக கலக்கத்தில் உள்ளது.

அந்தக் குடும்பம் ராஜபக்ஷ குடும்பமா அல்லது வேறு குடும்பமா என்பதை எம்மால் கூற முடியாது. ஆனால், விசாரணைகளுக்கமைய உண்மைகள் வெளிப்படுத்தப்படும்.

கைது செய்யப்படுபவர்களின் வாக்குமூலங்கள் பெறப்படும். அவ்வாறான வாக்குமூலங்களில் இருந்து கிடைக்கக்கூடிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மேலதிக விசாரணைகள் எவ்வித தடைகளும் இன்றி முன்னெடுக்கப்படும். யாரும் பயப்பட வேண்டிய தேவையில்லை. விசாரணைகள் மூலம் நிச்சயம் நாட்டுக்கு உண்மைகள் வெகுவிரைவில் வெளிப்படுத்தப்படும்.” - என்றார்.

## கம்பளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இடத்திலேயே உயிரிழந்தனர். அந்தப் பகுதியில் நின்று கொண்டிருந்த மேலும் ஒரு பெண்ணும் உயிரிழந்துள்ளார்.

காரைச் செலுத்திய பெண் உட்பட இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.



# விமல், கம்மன்பில போன்றோர் இனவாதம் கக்கி மீண்டெழ முயற்சி

## அநுர அரசு கடும் குற்றச்சாட்டு

"விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றோர் இனவாதத்தை முன்னிலைப்படுத்தி இழந்த அரசியல் செல்வாக்கை மீண்டும் கைப்பற்ற முயற்சிக்கின்றார்கள்."

– இவ்வாறு தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது தேர்தலில் போட்டியிடாமலே தோல்வியை அறிந்து விலகிக் கொண்டவர்கள் இன்று தேசப்பற்றாளர்கள் போல் பேசுகின்றார்கள்.

இந்த நாடு இனவாதத்தால் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. அதற்கு இவர்கள் பொறுப்புக்கூற வேண்டும்.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் இன்றும் கடந்த அரசு தான் ஆட்சியில் உள்ளது என்று நினைத்துக் கொண்டு செயற்படுகின்றார்கள்.

போலியான விடயங்களைச் சமூகமயப்படுத்த முயற்சிக்கும் போது அந்த விடயங்கள் தொடர்பான விசாரணைகளுக்கு அவர்கள் முன்னிலையாக வேண்டும்.

இனவாதத்தை முன்னிலைப்படுத்தி இழந்த அரசியல் செல்வாக்கை மீண்டும் கைப்பற்ற இவர்கள் முயற்சிக்கின்றார்கள். நாட்டு மக்கள் இதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள். மக்கள் மத்தியில் தவறான விடயத்தை சமூகமயப்படுத்த இடமளிக்க முடியாது."

– என்றார்.

# சிறுவர் இடம்பெயர்வு பட்டியலில் இலங்கைக்கு மூன்றாவது இடம்

## யுனிசெப் அறிக்கை




காலநிலை மாற்றங்களுடன் தொடர்புடைய இயற்கை அனர்த்தங்களால் சிறுவர்கள் இடம்பெயர்வதில், தெற்காசியாவில் இந்தியா மற்றும் பங்களாதே/க்கு அடுத்தபடியாக இலங்கை மூன்றாவது இடத்தில் இருப்பதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் தெற்காசிய பிராந்தியத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

2016 முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான ஏழு ஆண்டுகளில், இலங்கையில் சுமார் 2 லட்சத்தில் 80 ஆயிரம் சிறுவர்கள் (மொத்த சிறுவர் சனத்தொகையில் 4.6 வீதம்) இடம்பெயர்ந்துள்ளனர்.

இதே காலகட்டத்தில் மொத்தம் 69 லட்சம் சிறுவர்களின் இடம்பெயர்வுடன் இந்தியா முதல் இடத்தில் உள்ளது.

பங்களாதேஷ் மிக உயர்ந்த சதவீத பாதிப்பைப் பதிவு செய்துள்ளது, அதன் சிறுவர் சனத்தொகையில் சுமார் 7.2 வீதம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இலங்கையில், சராசரியாக ஒவ்வொரு அனர்த்தத்துக்கு சராசரியாக 965 சிறுவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

புயல்கள் பெரும்பாலான இடம்பெயர்வுக்கு காரணமாகியுள்ளதுடன், அவை 54 வீத இடப்பெயர்வுக்கு காரணமாக இருந்துள்ளன.

அத்துடன் வெள்ளப்பெருக்கு 44 வீத இடப்பெயர்வுகளுக்கு வழிவகுத்துள்ளது.

இதேவேளை, தெற்காசியாவில் உள்ளவர்கள் காலநிலை மாற்ற அனர்த்தங்களால் இடம்பெயரும் அபாயத்தை எதிர்கொள்கின்றனர். இது சிறுவர்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மீறல்களை அதிகரிக்க வழிவகுக்கிறது.

சிறுவர்களின் பாதுகாப்பு, தயார்நிலை மற்றும் கொள்கையில் அவர்களைச் சேர்ப்பதை மேம்படுத்த அரசாங்கங்கள், நன்கொடையாளர்கள், அபிவிருத்திப் பங்காளிகள் மற்றும் தனியார் துறை ஆகியோருடன் இணைந்து செயல்படுமாறு யுனிசெப் வலியுறுத்தியுள்ளது.



# ஒன்றுகூடி அரசாங்கத்தை வீழ்த்த எதிரணிகள் திட்டம்

## கொழும்பில் பேரணி நடத்தவும் முயற்சி

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்துவரும் சர்வாதிகார அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்ப்பு பேரணியை கொழும்பில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ள எதிர்க்கட்சிகள், அது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உட்பட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கொழும்பில் ஒன்றுகூடி கலந்துரையாடியபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள், உறுப்பினர்களின் விசேட சந்திப்பு மற்றும் இரவு விருந்துபசார நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இரவு கொழும்பில் உள்ள ஒரு தனியார் ஹோட்டலில் நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தனவின் அழைப்பின் பேரில் இந்த நிகழ்வில் 25 இற்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

சமகால அரசியல் விடயங்கள் மற்றும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் உட்பட பல தீர்மானங்கள் அதில் எடுக்கப்பட்டுள்ளன. ஒன்றிணைந்த எதிர்க்கட்சியாகத் தொடர்ந்தும் செயற்படுவதற்கான தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

எதிர்க்கட்சியாக ஒன்றிணைந்து எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கூட்டு நடவடிக்கைகள் தொடர்பாகவும் கட்சித் தலைவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டன.

இந்தச் சந்திப்பில் சமர்ப்பிக்கப்பட்ட கிட்டத்தட்ட அனைத்து யோசனைகளுக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நமால் ராஜபக்ஷ உள்ளிட்ட தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பு மிகவும் பயனுள்ளதாகவும் முக்கியமானதாகவும் இருந்தது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

# பட்ஜட்டில் ஜனாதிபதிக்கு ஏன் அதிக நிதி?

## காரணத்தை வெளிப்படுத்துமாறு தயாசிறி வலியுறுத்து



“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2026ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் ஜனாதிபதிக்கான செலவுகளுக்காக 11.37 பில்லியனை ஒதுக்கியிருக்கின்றார். இது 2024இல் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான செலவை விட 72 சதவீத அதிகரிப்பாகும். இவ்வாறு பாரியளவு நிதி ஒதுக்கீட்டுக்கான காரணத்தை ஜனாதிபதியும், அரசும் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.”

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“2024ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான செலவுகள் 6.6 பில்லியன் ரூபாவாகும். அது 2025இல் அநுரகுமார திஸாநாயக்கவின் முதலாவது வரவு – செலவுத் திட்டத்தில் 2.9 பில்லியன் வரை குறைக்கப்பட்டது. அது தொடர்பில் அரசால் பாரிய பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2026ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் அது 11.37 பில்லியனாக உயர்வடைந்துள்ளது.

2024இல் ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஒதுக்கப்பட்டிருந்த நிதியை விட இது 72 சதவீத அதிகரிப்பாகும். ஆட்சியைப்பொறுப்பேற்றபின்னர்சிலவேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு தமக்குக் குறிப்பிட்டளவு நிதி தேவை ஏற்படும் என்பதை இப்போதாவது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க புரிந்துகொண்டிருப்பார் என நம்புகின்றோம்.

2024இல் பிரதமருக்கான நிதி ஒதுக்கீடு 1.15 பில்லியனாகும். 2025இல் இது 1.17 பில்லியனாக அதிகரிக்கப்பட்டது. 2026க்காக நிதி ஒதுக்கீடு 0.9 பில்லியனாகக் குறைவடைந்துள்ளது. அதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆனால் ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடு ஓராண்டுகள் சுமார் 6 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஜனாதிபதியின் பதில் என்ன? கடந்த காலங்களில் ஜனாதிபதிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்ட போது அவற்றை கடுமையாக விமர்சித்த ஜே.வி.பி.யினர் இப்போதாவது யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். தமது சட்டைப் பைகளை நிரப்பிக் கொள்வதற்காக எந்தவொரு ஜனாதிபதியும் நிதியை ஒதுக்கிக்கொள்வதில்லை.

அது மாத்திரமின்றி கடந்த காலங்களில் நிதி அமைச்சு ஜனாதிபதியின் கீழிருப்பது முற்றிலும் தவறு என்றும் இவர்கள் கூறினர். ஆனால், இன்று என்ன நடந்திருக்கின்றது? பொருளாதாரம் தொடர்பில் நிபுணத்துவம் அற்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தற்போது நிதி அமைச்சைத் தன்வசப்பத்தி, தனக்கேற்றவாறு நிதி ஒதுக்கீடுகளை செய்துகொண்டிருக்கின்றார். இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஜனாதிபதியும் அரசும் நிச்சயம் பதிலளிக்க வேண்டும்.”

– என்றார்.




# நவம்பர் 6, 11 இல் பிஹார் பேரவைத் தேர்தல்; வாக்கு எண்ணிக்கை 14 ஆம் திகதி நடைபெறும்

பிஹார் சட்டப்பேரவை தேர்தல் நவம்பர் 6. 11ஆம் திகதிகளில் இருகட்டங்களாக நடத்தப்படும். நவம்பர் 14ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்று தலைமைத்தேர்தல்ஆணையர்ஞானேஷ் குமார் தெரிவித்துள்ளார்.

பிஹார் சட்டப்பேரவையின் பதவிக் காலம் நவம்பர் 23ஆம் திகதியுடன் நிறை வடைகிறது. இந்த நிலையில், மாநில சட் டப்பேரவை தேர்தலுக்கான அட்டவணையை டில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் நேற்று வெளியிட்டார். அப்போது, செய்தி யாளர்களிடம் அவர் மேலும் தெரிவிக் கையில்,

“நேர்மை, நம்பகத்தன்மையுடன் வாக் காளர் பட்டியல் தயாரிப்பது. சுதந்திர மாக, நேர்மையான முறையில் தேர்தல் நடத்து வது ஆகிய இரு பிரதான பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொள் கிறது. பிஹாரில் சமீபத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி மேற்கொள் ளப்பட்டது. கடந்த ஜுன் 24ஆம் திகதி திருத்தப் பணியை தொடங்கி, ஓகஸ்ட் 1 ஆம் திகதி வரைவு பட்டியலை வெளியிட் டோம். அனைத்து கட்சிகளுக் கும் இந்த பட்டியல் வழங்கப்பட்டது.

பின்னர். பட்டியலில் திருத்தம் மேற் கொள்ள போதிய அவகாசம் வழங்கப் பட்டது. செப்டம்பர் 30 ஆம் திகதி இறுதி வாக்காளர் பட்டியலை வெளியிட்டோம். இதில் தவறு இருந்தால் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் முறையிட்டு நிவார ணம் பெறலாம். பிஹார் சட்டப்பேரவை தேர்தல் தொடர்பாக மாநில அரசியல் கட்சிகள், மாநில தேர்தல் அதிகாரிகளு டன் விரி வாக ஆலோசனை நடத்தப்பட் டது. இதில் பெறப்பட்ட ஆலோசனை களை பரிசீலித்து நேர்தல் திகதிகள் இறுதி செய் யப்பட்டன.

அதன்படி எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதி களில் இருகட்டங்களாக பிஹார் பேரவை தேர்தல் நடத்தப்படும். வாக்கு எண் ணிக்கை நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறும். முதல்கட்ட தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் ஒக்டோபர் 18 ஆம் திகதியும். 3 ஆம் கட்ட தேர்தலுக்கான மனு தாக்கல் ஒக்டோபர் 21 ஆம் திகதியும் தொடங்கும். பிஹாரில் மொத்தம் 243 சட்டப் பேரவை தொகுதிகள் உள்ளன. முதல் கட்ட தேர்தலின்போது 121 தொகுதி வளுக்கும். 2 ஆம் கட்ட தேர்தலின்போது 122 தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெறும்.

மாநிலத்தில் 3.92 கோடி ஆண்கள், 3.50 கோடி பேர் பெண்கள் உட்பட மொத் தம் 7.43 கோடி பேர் வாக்குரிமை பெற் றுள்ளனர். முதல்முறையாக 4 லட்சம் பேர் வாக்களிக்க உள்ளனர்.” என்று தெரிவித்தார்.

# ‘ஒரு தலைவராக செய்யவேண்டியதை செய்ய வேண்டும்’; கரூர் சம்பவம் குறித்து விஜய்க்கு கமல்ஹாசன் அறிவுரை



“கரூர் சம்பவத்தை பொறுத்தவரை, காலம் கடந்து அறிவுரை சொல்ல முடி யாது. இனி ஒரு தலைவராக செய்யவேண் டியதை அவர் செய்ய வேண்டும்.” என்று த.வெ.க. தலைவர் விஜய்க்கு மநீம தலை வர் கமல்ஹாசன் எம்.பி அறிவுறுத்தி யுள்ளார்.

கரூரில் த.வெ.க. பிரச்சாரத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் காயமடைந்த வர்களை சந்தித்து ஆறுதல் கூறுவதற் காக மநீம தலைவர் கமல்ஹாசன் எம். பி. நேற்று கரூர் சென்றார். அப்போது, சம்பவம் நடந்த வேலுசாமிபுரம், த.வெ. கவினர் ஏற்கெனவே அனுமதி கேட்ட லைட்ஹவுஸ் முனை, உழவர் சந்தை ஆகிய இடங்களை பார்வையிட்டார்.

பின்னர், உயிரிழந்தவர்களின் குடும் பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினார். இதில், உயிரிழந்த 2 வயது சிறுவன் துரு விஷ்ணுவின் வீட்டுக்குச் சென்ற கமல்ஹாசன், அவரது குடும்பத்தின ருக்கு ஆறுதல் கூறி ரூ.1 லட்சத்துக் கான காசோலையை வழங்கினார். பின் னர் செய்தியாளர்களிடம் கமல்ஹாசன் கருத்து தெரிவிக்கையில்,

“இந்த சம்பவத்தில் யாரையும் குற்றம் சுமத்த முடியாது. இதில் அனைவருக்கும் பொறுப்பு உள்ளது.

நீங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டிய தால், சில விஷயங்கள் நீதி வழங்குவ தற்கு ஏதுவாக, சில உண்மைகள் வெளி வர உங்கள் பணியும் காரணமாக இருந் துள்ளது. சம்பவம் நடந்ததை கேள்விப் பட்ட உடன் மருத்துவமனைக்கு சென்று உரிய நடவடிக்கை எடுத்த செந்தில் பாலா ஜிக்கு நன்றி சொல்ல வேண்டும். அவர் ஏன் வந்தார், எப்படி வந்தார் என கேட்க வேண்டாம். இது அவரது ஊர், அவரு டைய மக்கள். அவர் வராமல் வேறு யார் வருவார். இன்னும் உயிர்சேதம் ஏற்படா மல் செந்தில் பாலாஜி உதவியுள்ளார்.

இந்த வழக்கு நீதிமன்றத்தில் உள் ளது. அதுகுறித்து கருத்து எதுவும் சொல் லக் கூடாது. மிக சிறப்பான தலைமை பண்புடன் நடந்து கொண்டு, முதல்வர் செயல்பட்ட விதம் பெருமையாக உள் ளது. இனிமேல் இதுபோன்ற தவறு நடக்கக் கூடாது. அதற்கு அழுத்தமாக சட்டங்கள் அமைய வேண்டும். நான் பேசு வது மனிதம், எதிர்க்கட்சிகள் பேசுவது அரசியல். இப்போது அதற்கு நேரமல்ல, இனி வரும் காலங்களில் பேசிக் கொள் ளலாம். எவ்வளவு பணம் கொடுத்தா லும், போன உயிர் திரும்பாது. பணம் எவ் வளவு கொடுத்தது என்ற போட்டி வேண் டாம்.

மனிதாபிமானம் காட்ட வேண்டிய நேரம். காலம் கடந்து அறிவுரை சொல்ல முடியாது. இனி ஒரு தலைவராக செய்ய வேண்டியதை அவர் செய்யவேண்டும். இப்போது யாரையும் சாடும் நேர மில்லை.” என்று கூறினார்.

# காசா போர் நிறுத்தத் திட்டத்தினை விரைவில் செயல்படுத்த வேண்டும்

## இஸ்ரேல் - ஹமாஸுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை




காசா போர் நிறுத்த திட்டத்தை விரைவாக செயல்படுத்த வேண்டும் என இஸ்ரேல் மற்றும் ஹமாஸுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனத்தின் காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையேயான போரை முடிவுக்குக் கொண்டு வர முயற்சித்து வரும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் 20 அம்சத் திட்டத்தைச் சமீபத்தில் பரிந்துரைத்தார்.

இதை இஸ்ரேல் ஏற்றுக் கொண்டது. இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி இஸ்ரேல் பிணைக்கைதிகளை விடுவிப்பது உள்ளிட்ட சில பரிந்துரைகளை ஹமாஸ் ஏற்றுக் கொண்டது. மற்ற பரிந்துரைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தனர்.

இதற்கிடையே பாலஸ்தீன கைதிகளை விடுவிக்க இஸ்ரேலும் ஒப்புக் கொண்டது.

இருதரப்பும்போர்நிறுத்தஒப்பந்தத்தின் முதல் கட்டத்தைச் செயல்படுத்தத் தயாராகி வருகின்றன.

இதுதொடர்பாக இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பு பிரதிநிதிகள் இடையே இன்று எகிப்தில் பேச்சுவார்த்தை நடக்கிறது.

இதில் அமெரிக்கப் பிரதிநிதியாக ஸ்டீவ்விட்காப்பங்கேற்பார்என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் போர் நிறுத்த திட்டத்தை இருதரப்பும் விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.


இதுதொடர்பாக அவர் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில்,

“இந்த வார இறுதியில், ஹமாஸ் அமைப்பினர் வசம் உள்ள பிணைக் கைதிகளை விடுவிப்பது, காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து மிகவும் முக்கியமான விவாதங்கள் நடந்துள்ளன.

இந்தப் பேச்சுவார்த்தைகள் மிகவும் வெற்றிகரமாகவும், விரைவாகவும் நடந்து வருகின்றன. மேலும் அனைவரும் விரைவாகச் செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நூற்றாண்டு பழமையான மோதலை நான் தொடர்ந்து கண்காணிப்பேன். நேரம் மிகவும் முக்கியமானது. இதில் விரைவாகச் செயல்பட வேண்டும். இல்லையென்றால் யாரும் பார்க்க விரும்பாத பெரிய இரத்தக்களரி தொடர்ந்து விடும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# அமெரிக்க, ஜப்பான் விஞ்ஞானிகள் மூவருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிப்பு




மருத்துவத்துக்கான நோபல் பரிசு, நோய் எதிர்ப்புத் தன்மை தொடர்பான கண்டுபிடிப்புகளுக்காக மேரி இ பிரன்கோவ், ஃப்ரெட் ராம்ஸ்டெல், ஷிமோன் சகாகுச்சி ஆகிய மூன்று விஞ்ஞானிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிக உயர்ந்த விருதாகக் கருதப்படும் நோபல் பரிசு, மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் சிறப்பான பங்களிப்பை வழங்கியவர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், இந்த ஆண்டுக்கான நோபல் பரிசை வெல்பவர்கள் குறித்த அறிவிப்பு நேற்று முதல் வெளியாகத் தொடங்கி உள்ளது.

நேற்று மருத்துவத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிசு மூன்று விஞ்ஞானிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த மேரி இ பிரன்கோவ், ஃப்ரெட் ராம்ஸ்டெல் மற்றும் ஜப்பானைச் சேர்ந்த ஷிமோன் சகாகுச்சி ஆகியோர் இந்த ஆண்டுக்கான மருத்துவத்துக்கான நோபல் பரிசை வென்றுள்ளனர்.

இவர்கள், உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தின் பாதுகாவலர்கள், ஒழுங்குமுறை டி செல்கள் ஆகியவற்றை அடையாளம் கண்டுள்ளனர். இவை, புதிய ஆராய்ச்சித் துறைக்கு வித்திட்டுள்ளன. இந்த கண்டுபிடிப்புகள், மருத்துவ பரிசோதனைகள் மூலம் மதிப்பீடு செய்யப்படும் சிகிச்சைமுறையின்வளர்ச்சிக்குவழிவகுத்துள்ளன. குறிப்பாக, புற்றுநோய் சிகிச்சைகளை வழங்குவதில் இந்த கண்டுபிடிப்புகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என கண்டறியப்பட்டுள்ளது.

# குப்பை மேட்டில் துப்பாக்கி மீட்பு



கொழும்பு – மாதம்பிட்டி குப்பை மேட்டில் இருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ரிவோல்வர் ரக துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களனி பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் மேற்படி பகுதிக்குச் சென்றிருந்தபோது, அந்த வழியாகச் சென்ற நபர் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்தத் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட துப்பாக்கி துருப்பிடித்த நிலையில் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எவரேனும் ஒருவர் இந்த துப்பாக்கியைக் கொண்டு வந்து குப்பை மேட்டில் வீசிச் சென்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் கித்சிறி குமாரவின் பணிப்புரைக்கமைய, மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு



ள் என இரண்டு வகை மீன்கள் கரை லைகள் மூலம் பிடிக்கப்பட்டு பல லட்சம் பா வரை விற்பனை செய்யப்பட்டுள் ன.

முதல் 1500 ரூபா வரை விற்பனை யாகின்றன. இதேவேளை இவ்வாறு பிடிக்கப்படும் மீன்களினால் ஒரு மீனவரின் நாள் வருமானம் 5 முதல் 6 லட்சம்

வலை மீனவர்களுக்கு இவ்வாறான பாரி மீன்கள் தொகுதியாக பிடிபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.





# பாடசாலை நீச்சல் தடாகத்தில் விழுந்த பந்தை எடுக்க முயன்ற மாணவன் நீரில் மூழ்கிச் சாவு!

மாத்தறை – திக்வெல்ல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தில் நீரில் மூழ்கி மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தரம் 12 இல் கல்வி கற்கும் மாணவன் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த மாணவன் பாடசாலையில் கிரிக்கெட் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது கிரிக்கெட் பந்து நீச்சல் தடாகத்தில் விழுந்துள்ளது.

இதனால் இந்த மாணவன் பாடசாலை நீச்சல் தடாகத்தில் விழுந்த பந்தை எடுக்க முயன்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திக்வெல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# கரைவலைகள் மூலம் சூரை மீன்களை அள்ளும் கல்முனைப் பகுதி மீனவர்கள்

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக பாரிய மீன்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாரிய சூரை மீன்கள், வளையா மீன்கள் என இரண்டு வகை மீன்கள் கரைவலைகள் மூலம் பிடிக்கப்பட்டு பல லட்சம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுள்ளன.

நேற்றும் இவ்வாறு காரைதீவு மற்றும் நிந்தவூர் பகுதிகளில் சூரை இன மீன்கள் அதிகளவாக கரைவலைகளில் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சூரை மீன் ஒன்று சுமார் 1300 ரூபா முதல் 1500 ரூபா வரை விற்பனையாகின்றன. இதேவேளை இவ்வாறு பிடிக்கப்படும் மீன்களினால் ஒரு மீனவரின் நாள் வருமானம் 5 முதல் 6 லட்சம் ரூபாவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது கல்முனை பிராந்திய கடற்கரையில் கரை வலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி தூண்டில் என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற நிலையில் கரை வலை மீனவர்களுக்கு இவ்வாறான பாரிய மீன்கள் தொகுதியாக பிடிபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.









# தலைமன்னார் கட்டுகாரன் குடியிருப்பில் குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பித்து வைப்பு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி, கட்டுகாரன் குடியிருப்பு கிராமத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் குடி தண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்ட கட்டுகாரன் குடியிருப்பு சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர்த் திட்டம் நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை மக்களின் பாவனைக்காக வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் கட்டுகாரன் குடியிருப்பு பகுதியில் உள்ள பொதுமக்கள் நீண்ட காலமாக குடிதண்ணீர் பெறுவதில் பல்வேறு சவால்களை எதிர் கொண்டு வந்த நிலையில் அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக இராணுவத்தின் 543 ஆவது காலாட்படையின் ஒழுங்கமைப்பில் வைத்தியர் ஜினஞ்சலா சானிக்க விஜயகுண சேகரவின் நிதி உதவியுடன் அந்தக் கிராமப் பாடசாலை மாணவர்கள் மற்றும் மக்கள் குடி தண்ணீர் பெறும் வகையில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வில் இராணுவத்தின் 54 ஆவது காலாட் படையின் கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் சந்திர அபய்ச்கோன் மற்றும் 54ஆவது காலாட் படை பிரிவின் பொறுப்பதிகாரி, கட்டுகாரன்குடியிருப்பு பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.















# தமிழ் மக்கள் பொதுத் தேர்தலில் விட்ட தவறுதான் இன்று பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்க செயலாளர் விசனம்



(த.சுபேசன்)

தமிழ் மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் விட்ட தவறுதான் இன்று பெரிய தலைவலியாக வந்து நிற்கின்றது என வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தின் செயலாளரும், வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவியுமான சி.ஜெனிதா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

2009இல் இருந்து இன்று வரை உள்நாட்டில் எந்தவிதமான தீர்வும் கிடைக்காத பட்சத்தில்தான் நாம் சர்வதேச விசாரணை கோரி தொடர்ச்சியாக போராடி வருகிறோம்.

ஜெனிவா கூட்டத்தொடரை முன்னிட்டு அண்மையில் செம்மணியில் முன்னெடுத்த அடையாள உண்ணாவிரதக் கவன வீர்ப்புப் போராட்டத்திலும் கூட நாம் உள்ளகப் பொறிமுறை வேண்டாம் என்பதனை வலியுறுத்தியிருந்தோம்.

குற்றவாளிகளால் ஒருபோதும் நீதி பெற்றுத்தர முடியாது. உண்மையைக் கண்டறிய முடியாது. அதேநேரம் மீள நிகழாமையை உறுதிப்படுத்தவும் முடியாது.

இந்நிலையில் இலங்கை தேசிய சமாதானப் பேரவை என்ற அமைப்பு இந்தப் பிரச்சனைக்கு இலங்கையின் நீதி அமைச்சரிடம் நீதியைக் கோருகின்றனர்.

இதனூடாக அவர்கள் சர்வதேச விசாரணையை புறந்தள்ளி உள்ளக விசாரணையை கோருகின்றனர்.

இதனூடாக இவ்வளவு காலமும் போராடிவருகின்றஎம்மக்களுக்குகிடைக்க வேண்டிய நீதியை கிடைக்க விடாமல் தடுக்கின்றனர்.எமதுபோராட்டத்தைஇல்லாதொழிக்க முயற்சிக்கின்றனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு அதிகமாக ஆதரவை வழங்கி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரை நாடாளுமன்றம் அனுப்பி வைத்தனர்.

இவ் விடயம் சர்வதேசத்தில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தியை ஆதரித்துவிட்டனர் என்ற மாயையை உருவாக்கியுள்ளது.

இதனூடாக உள்ளக விசாரணை ஊடாக தீர்வு வழங்கலாம் என்ற தவறான எண்ணம் சர்வதேச சமூகம் மத்தியில் விதைக்கப்பட்டுள்ளது. நாம் அன்று விட்ட தவறு இன்று பிரச்சினையாக மாறியுள்ளது.

இலங்கை தேசிய சமாதான பேரவை செய்யும் செயற்பாடும் தமிழ் இனத்திற்கு இழைக்கப்பட்ட அநீதியை மூடி மறைத்து, அரசினையும் இராணுவத்தையும் காப்பாற்றுவதாகவே அமைந்து காணப்படுகின்றது. அதற்காகவே அவர்கள் நீதி அமைச்சரிடம் நீதி கோருகின்றனர். – என மேலும் தெரிவித்தார்.

# மெதடிஸ்த திருச்சபையின் 3 குருவானவர்களுக்கு குருத்துவ அருட்பொழிவு அபிஷேகம் திருமலையில்









(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் 3 குருவானவர்களுக்கு, குருத்துவ அருட்பொழிவு அபிஷேகம் வழங்கும் நிகழ்வு நேற்று திருகோணமலை மெதடிஸ்த திருச்சபை ஆலயத்தில் நடைபெற்றது.

அருட்திரு.குணம் சுரேந்தர். அருட்திரு.மோகன் ராம்கீ, அருட்திரு.பிரியந்த பெர்ணான்டோ ஆகியோர் புதிய குருக்களாக அருட்பொழிவு செய்யப்பட்டனர்.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அருட்கலாநிதி.எம்.டீ.கிங்ஸிலி வீரசிங்க தலைமையில் செயலாளர் அருட்திரு.எஸ்.எஸ்.டெரன்ஸ், மூன்று திருமாவட்டங்களின் தலைவர்கள் உட்பட சிரேஷ்ட அருட்பணியாளர்கள் புதிய குருவானவர்களுக்கான அருட்பொழிவு அபிஷேகத்தை வழங்கி வைத்தனர்.

208 ஆண்டுகள் பழமை வாய்ந்த திருகோணமலை மெதடிஸ்த ஆலய வரலாற்றில் முதன்முறையாக இந்தப் புதிய குருமாருக்கான அருட்பொழிவு நிகழ்வு திருகோணமலையில் நடைபெற்றுள்ளது.



# நற்பிட்டிமுனையில் ஐஸ் போதைப் பொருளுடன் விசேட அதிரடிப் படையினரினால் ஒருவர் கைது!

**(தில்சாத் பர்வீஸ்)**

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நற்பிட்டிமுனை பழைய மின்சார சபை வீதியில் வைத்து ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை நேற்றுய் திங்கட்கிழமை மாலை வேளையில் கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, நற்பிட்டிமுனைப் பகுதியைச் சேர்ந்த 23 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 770 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது. சந்தேக நபர்கள் சான்றுப்பொருள்களுடன் சட்ட நடவடிக்கைக்காக கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மாஅதிபர் டி.ஜி.எஸ்.சமந்தவின் பணிப்புரைக் கமைய, அம்பாறை வலயக்கட்டளை பதில் அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஆர்.பி.கே.டி.ரத்னவீரவின் அறிவுறுத்தலுக்கமைய, மட்டக்களப்பு வலய உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் பி.கே.என்.குலதுங்கவின் வழிகாட்டலில், கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பி.இஹலகேவின் தலைமையிலான விசேட அதிரடிப்படை அதிகாரிகள் இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியா மாவட்ட டி.ஐ.ஜிக்கு இடமாற்றம்!




**(கி.வசந்தன்)**

வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (டி.ஐ.ஜி) சாமந்த விஜயசேகரவுக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபராக செயற்பட்டு வந்த சாமந்த விஜயசேகர மேல் மாகாணத்தின் தெற்கு பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக தேசிய பொலிஸ் சேவைகள் ஆணைக்குழுவால் இடமாற்றம் வழங்கப் பட்டுள்ளது.

அவரது இடமாற்றத்தால் ஏற்பட்டுள்ள வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் வெற்றிடத்திற்கு போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரியாக செயற்பட்டு வந்த பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக்க கப்பு கொட்டுவ நியமிக்கப்பட்டுள்ளார்.

# வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தின் பழைய நிர்வாகிகள் விசாரணைக்கு அழைப்பு


SRI LANKA POLICE

MESSAGE FORM

**(கி.வசந்தன்)**

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரை விசாரணைக்கு வருமாறு பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவு பொலிஸார் அழைத்துள்ளார்கள்.

வவுனியா, நெடுங்கேணி பொலிஸார் ஊடாக இந்த அழைப்பாணைக் கடிதங்கள் நேற்று வழங்கப்பட்டன.

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்னாள் தலைவர் சசிகுமார், செயலாளர் தமிழ்ச்செல்வன் ஆகியோரே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் விசாரணைக்காக எதிர்வரும் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 10 மணிக்கு வவுனியாவுக்கு அழைக்கப் பட்டுள்ளார்கள்.

வாக்குமூலம் ஒன்றை பெறுவதற்காகவே இருவரையும் வருகை தருமாறு அழைப்பாணைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் சிவராத்திரி தினத்தன்று இருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பின்னர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்தனர். தற்போது ஆலயத்திற்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு பல மாதங்கள் ஆகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# பேசாலைக் கடற்கரையில் காற்றாலைத் திட்டத்துக்கு மணல் ஆய்வுக்கு வந்த குழு மக்களினால் விரட்டியடிப்பு

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள பேசாலை பொலிஸ் பிரிவில் உள்ள பேசாலை தெற்கு கடற்கரை பகுதியில் நேற்றைய தினம் திங்கட்கிழமை மாலை காற்றாலை திட்டத்தை செயல்படுத்துவதற்கான மணல் ஆய்வு முன்னெடுக்க குழு ஒன்று வருகை தந்த நிலையில் மக்களின் பாரிய எதிர்ப்புக்கு மத்தியில் அந்தக் குழு அங்கிருந்து வெளியேறி உள்ளது.

பேசாலை கிராமத்திற்கு உட்பட்ட தெற்கு கடற்கரை பகுதியில் காற்றாலை திட்டத்தை செயல்படுத்துவதற்கான மணல் ஆய்வு முன்னெடுக்க இயந்திரங்களுடன் குழு ஒன்று வருகை தந்ததை அறிந்து கொண்ட பிரதேச மக்கள் அந்தப் பகுதிக்குச் சென்றுங்கு வருகை தந்த குழுவினருடன் கருத்து முரண்பட்டனர்.

இதன் போது பேசாலை பொலிஸாரும் அவ்விடத்திற்கு சென்ற நிலையில் அங்கு பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

மேலும் காற்றாலை திட்டத்தை செயல்படுத்துவதற்கான மணல் ஆய்வு முன்னெடுக்க இயந்திரங்கள் ஏற்றி வந்த டிராக்டர் இயந்திரத்தை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் தொடர் எதிர்ப்பை தொடர்ந்து வந்த குழுவினர் அவ்விடத்தில் இருந்து பின்வாங்கிச் சென்றுள்ளனர் என பிரதேச மக்கள் தெரிவித்தனர்.














# தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு முன் நேற்றும் கவனவீர்ப்புப் போராட்டம்

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணம் – வலிகாமம், தையிட்டி பகுதியில் அமைந்துள்ள, திஸ்ஸ விகாரைக்கு எதிராக பௌர்ணமி தினமான நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் அந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறியும், அதனை அங்கிருந்து அகற்றுமாறு கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். ஒவ்வொரு பௌர்ணமி தினத்துக்கும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் நேற்றும் அந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டு, கைகளில் கறுப்பு கொடிகளை தாங்கியிருந்தனர். இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

தையிட்டியில் அமைந்துள்ள விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாகப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# இன்றைய ராசி பலன்கள் - 07.09.2025




இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வு மிகுந்து காணப்படுவீர்கள். உங்களிடம் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்களின் மாறுபாடற்ற மனநிலை காரணமாக நீங்கள் திறமையான முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்ளவும் அதனை குறித்தநேரத்தில் முடிக்கவும் பணியிடச் சூழல் உகந்ததாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வை பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் காணப்படாது. உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று கட்டுப்பாடற்ற சூழ்நிலை காணப்படும். மந்தமான தருணங்கள் காணப்படும். எனவே இருப்பதைக் கொண்டு மகிழ வேண்டும். எதிர்காலத்திற்காக செயல்பட முயல வேண்டும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. முறையாக திட்டமிடுவதன் மூலம் சிறப்பாக செயல்பட இயலும்.

திரைப்படம் பார்த்தல் மற்றும் வெளியிடங்களுக்கு செல்லுதல் போன்ற நிகழ்சிகள் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பயணத்தின்போது பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா பயிற்சியின் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். குறைந்த முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். சிறந்த செயல் திறம் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

பணி சம்பந்தமான புதிய வாய்ப்புகள் உருவாகலாம். அந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம் பணியில் முன்னேற்றம் காணலாம்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி மற்றும் குடும்பத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள்.

பணவரவு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்களைக் காண்பீர்கள். இன்று புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகளில் பங்கு கொள்வது உங்களுக்கு லாபகரமாக அளிக்கும்.

உங்கள் திறமை காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் உங்கள் பணிகளை உற்சாகமாக செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான உறவுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று போதிய பணம் காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. ஆன்மீக பயணங்கள் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். பயணங்கள் மூலம் பலனுள்ள மாற்றங்கள் ஏற்படும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினம்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உறவின் சிக்கல்களை தீர்க்க உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதன் மூலம் உறவில் நல்லிணக்கம் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




பொறுமையான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் நீங்கள் சாதகமான பலன்களை காணலாம். சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரலாம். வெற்றி காண முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. பனியின் போது நீங்கள் விழிப்புடன் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படும். சமநிலை அணுகுமுறை மேற்கொண்டு நல்ல புரிந்துணர்வை பராமரியுங்கள்.

அதிகரிக்கும் செலவுகள் கவலையை உண்டாக்கும். பணத்தை விவேகத்துடன் கையாள்வதன் மூலம் நிலைமையை சிறப்பாக சமாளிக்கலாம்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். அவற்றின் மூலம் லாபகரமான பலன் கிடைக்கும். நீங்கள் இன்று நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.

பணியில் உங்கள் செயல்திறன் அபாரமாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். இதனால் திருப்தியும் சாதித்த உணர்வும் உங்களிடம் காணப்படும்.

உங்கள் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சி ஒன்றைப் பற்றி உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்கள் துணையுடன் கொண்டாடி மகிழ்வீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று காணப்படும் குழப்பமான சூழ்நிலை உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். அத்தகைய சூழ்நிலையை கையாள்வது கடினம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். உங்கள் பணிகளை திறம்பட செய்ய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்களின் உணர்ச்சி வசப்பட்ட மனநிலையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் நன்மை விளையும்.

நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது.பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

நீங்கள் தலைவலி மற்றும் சளித் தொல்லையால் அவதிப்பட நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.10.2025




இன்று நீங்கள் பதட்டமான மன நிலையில் இருப்பீர்கள். இசை கேட்ப தன் மூலம் ஆறுதல் கிடைக்கும். விவாதம் செய்வதை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

கவனக்குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை சிறப்பாக செய்ய கவனமாக இருப்பது உதவியாக இருக்கும்.

உறவில் ஸ்திரத்தன்மை தக்க வைக்க உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. கூடுதல் செலவுகள் உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

தூக்கமின்மை காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். இதன் மூலம் திருப்தி உண்டாகும். வெற்றி காண எளிய அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் பணியில் நீங்கள் திறமை யாக செயல்படுவீர்கள்.இதனால் திருப்தி கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் நண்பர் இல்ல விழாவில் பங்கு கொள்ள பயணம் மேற்கொள்ளும் போது உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களை கழிப்பீர்கள்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். கணிசமான தொகை காண அதிர்ஷ்டம் சாதகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்க ளிடம் காணப்படும் நம்பிக்கை காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். என்றாலும் உறுதி மற்றும் சளைக்காத குணம் மூலம் வெற்றி காண்பீர்கள்.

எதிர்மறை விளைவுகள் மற்றும் எதிர்மறை எண்ணங்கள் சிறப்பாக பணியாற்ற தடையாக இருக்கும். சில கட்டுப்பாடுகள் சிறந்த பலன் காண தடையாக இருக்கும்.

கவனமற்ற பேச்சு காரணமாக உங்கள் துணை யுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.உறவில் நல்லிணக்கம் காண நட்பான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும்.

வரவும் செலவும் கலந்து காணப்படும். உங்கள் சேமிப்பை உயர்த்துவது கடினமாக உணர்வீர்கள்.

பாதுகாப்பின்மை உணர்வு காரணமாக நரம்பு பிரச்சினை ஏற்படலாம்.




இன்று பயணம் காணப்படுகின் றது. இது புதியதொடர்புகள் கிடைக்க பயனுள்ள வாய்ப்பை உருவாக்கித் தரும்.

பணியிடத்தில் நன்மையான பலன் கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப் பிற்கு பாராட்டைப் பெறுவீர்கள்.

பயணத்தின்போது உங்கள் துணையுடன் மகிழ்ச்சி யான தருணங்களை கொண்டாடி மகிழ்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். என்றாலும் குடும்பத்திற்காக சிறிது பணம் செலவு செய்ய நேரும்.

ஆரோக்கியமான உணவு உட்கொள்வதன் மூலம் திடமாக இருக்கலாம். அசௌகரியத்தை சமாளிக்க லாம்.

# தொடர்ந்தும் எங்களுடைய மக்கள் போராடுவார்கள் இந்த சிங்கள, பௌத்த ஆட்சியாளர்களை நம்போம்

## சிவாஜிலிங்கம் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணம் – வலிகாமம், தையிட்டி பகுதியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாை-ரக்கு எதிராக போயா தினமான நேற்றும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில், இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப் பாட்டத்தில் பங்கு கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங் கம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித் தார்.

தொடர்ந்தும் எங்களுடைய மக்கள் போராடுவார்கள். நாங்கள் இந்த சிங்கள – பௌத்த ஆட்சியாளர்களை நம்ப மாட்டோம் என அவர் கூறியுள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சட்ட விரோதமாக, தனியார் காணி களை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு இப்பிர தேச மக்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரும் ஒவ்வொரு பௌர் ணமி தினமும் போராடிக்கொண்டு இருக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் இந்தப் புதிய ஆட்சி ஒரு வருடம் நிறைவு பெற்றதன் பின்னரும் இன்னமும் "ஆராய்கிறோம்",



"ஆராய்கிறோம்" எனக் கூறி முன்னைய சிங்கள – பௌத்த ஆட்சியாளர்களைப் போலவே நாங்களும் இருக்கின்றோம் என எமக்குத் தெளிவாக புரிய வைக் கின்றனர்.

ஆனாலும் இப்பொழுது விகாரையை அகற்ற முடியாது என கூறும் நிலைமை காணப்படுகிறது. இதனைப் பற்றித் தீர் மானிக்கவே இவ்வளவு காலம் எடுப்பது என்றால் ஆக்கிரமிப்பை தொடர்ந்து நடத் தும் போது பொது மக்கள் களைப்படை வார்கள், அல்லது இந்த எதிர்ப்பை கை விடுவார்கள் எனும் எண்ணத்தில் தான் இழுத்தடிக்கிறார்களோ தெரிய வில்லை.

ஆனால்எமது பொதுமக்கள்தொடர்ந்து போராடுவார்கள். இந்த சிங்கள – பௌத்த ஆட்சியாளர்களின் சட்ட விரோத நட வடிக்கைக்கு எதிராக எந்தப் பகுதியில் இருந்தாலும் பரவாயில்லை, மக்களைத் திரட்டி அதற்கான எதிர்ப்பைத் தெரி விப்போம்.

அது ஒன்றுதான் தமிழ் மக்களின் விடுதலை மற்றும் சுதந்திரத்தை பெறு வதற்கான வழியாக இருக்கும் என நம் பித்தான் இந்தப் போராட்டத்தில் நாம் தொடர்ந்து பங்கு பற்றிக் கொண்டு இருக் கின்றோம்.

ஆகவே இந்த தேசிய மக்கள் சக்தி யின் புதிய திசை காட்டி சரியான வழியை காட்டும் என நம்பி எமது பல மக்கள் ஏமாந்துள்ளார்கள். ஆனால் இப்போது அந்த திசைகாட்டி அதலச் பாதளத்தை நோக்கி திசை காட்டி கொண்டு இருப்பதை மக்கள் மெல்ல மெல்ல புரிந்து கொண்டு இருக்கின்றார்கள்.

இன்னும் முழுமையாக அவர்களின் நடவடிக்கைகளை மக்கள் பரிபூரணமாக புரிந்து கொள்வார்கள் என நம்புகிறோம். – என சிவாஜிலிங்கம் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.